
# பத்திரகாளி அம்மை பதிகம்



ஆக்கம் :

யாழ்/அல்வாயூர்

ஆசிரியர், வித்துவான்

ம. முருகேசு

# பத்திரகாளி அம்மை பதிகம்

ஆக்கம் :

யாழ்/அல்வாயூர்

ஆசிரியர், வித்துவான்

ம. முருகேசு

வெளியிடுபவர் : ஆசிரியர்
மயூரபதிபத்திரகாளி அம்மை பதிகம்,
17B3/4 மயூரா பிளேஸ்,
ஹவலக் றோட்,
கொழும்பு - 6.

முதற்பதிப்பு : ஆடி 1993

உரிமை : ஆசிரியருக்கு

PATHTHIRAKALI
AMMAI PATHIGAM: TAMIL SONGS IN PRAISE of
GODDESS PATHITHIRAKALI AMMAI
of MAYURAPATHY

SONG BY : ALVAYOOR. M. MURUGESU
17B 3/4 MAYURA PLACE,
HAVELOCK ROAD,
COLOMBO- 6.

Computer Type setting & Printing

***SARASU PUBLICATIONS***
D 2/8, ANDERSON FLATS,
NARAHENPITIA.

# மயூரபதி
# பத்திரகாளி அம்மை பதிகம்

## சமர்ப்பணம்:

இப் பாமாலையை மயூரபதி அம்பாளின்
திருவடித் தாமரைகளில்
அன்புக் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றேன்.

*- ஆசிரியர்.*

# கொழும்பு - வெள்ளவத்தை
# ஸ்ரீராம கிருஷ்ண மிஷன்
# சுவாமிஜீ ஆத்மகனாநந்தா
## அவர்களின்
## ஆசியுரை:

ஓம் சர்வ மங்கல மாங்கல்யே
சிவே சர்வார்த்த சாதிகே!
சரண்யே த்ரியம்பகே கௌரி
நாராயணி நமோ ஸ்துதே!!

வெள்ளவத்தையில் அமர்ந்து அருள்பாலிக்கும் உலக நாயகி மயூரபதி பத்திரகாளியம்மையின் தாமரைப் பாதங்களைப் போற்றி வணங்குகின்றேன்.

அல்வாயூரைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு ம. முருகேசு அவர்கள் அன்னையின் அருளால் இயற்றிய "வெள்ளவத்தை - மயூரபதி பத்திரகாளி அம்மை பதிகம்" என்னும் கட்டளைக் கலித்துறைப் பாவடிவத்தில் ஆக்கப்பெற்ற சிறு நூலை வாசித்தோம்..

அன்னையின் அருட்தோற்ற அழகினையும், அவளது திருப்பாதங்களை வணங்குவதால் ஏற்படும் நலன்களையும் திரு.. முருகேசு அவர்கள் பக்திநிறைந்த இருபத்தொரு பாக்களில் அமைத்துள்ளார். அன்னையின் அருளினால் ஈர்க்கப்பட்டு பக்தி மேலீட்டினால் அவர் இயற்றியுள்ள இப்பாக்கள் படிப்பவர் மனதிலே ஆன்மீக தாகத்தை ஏற்படுத்துவனவாக உள்ளன.

ஆசிரியர். ம. முருகேசு அவர்களின் ஆன்மீக இலக்கியப் பணி மேன்மேலும் வளர அன்னையின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

சுவாமி ஆத்மகனாநந்தா

# அணிந்துரை:

அங்க வேலையில் உமையவள் வெகுளியால் அடல்செய்
நங்கை யாகிய பத்திர காளியை நல்க
செங்கை யோரிரண் டாயிரம் பாதிசெம் முகமாய்த்
துங்க வீரபத்திரர் தனை யடைந்தனள் துணையாய்.

தக்கப் பிரசாபதியின் தருக்கினையடக்க இறைவன் வீரபத்திரரைத் தோற்றுவித்த காலை, உமையம்மை பத்திர காளியை நல்கி வீரபத்திரர்க்குத் துணையாக அளித்தனள் எனக் காளியின் தோற்றம் பற்றிக் கந்தபுராணம் பேசும். துட்டர்களையும் மறக்கருணை வழி நற்கதியுய்க்கும் நன்னோக்கியன்ற வடிவே பத்திரையின் தோற்றம். அகில உலக அன்னையாகிய பராசக்தி, பத்திரை வடிவந் தாங்கி வீற்றிருந்து அருள்புரியும் தலங்களுள் கொழும்பு மயூரபதி பிரபலமானது. அரசும் வேம்பும் ஒன்றாய் இணைந்து நிற்கும் விருட்ச சூழலில் அன்னை அமர்ந்திருப்பது தலத்திற்குத் தனிச்சிறப்பளிக்கும் அம்சம்.

இத்தகைய மகிமை வாய்ந்த அம்மையைச் சரணடைந்து அவள் அருட்கடை நோக்கு வாய்க்கப் பெற்ற யாழ்ப்பாணத்து அல்வாயூர் ஆசிரியர், கவிஞர், வித்துவான் ம. முருகேசு அவர்கள் அம்பாள் மீதுள்ள தமது அன்புப் பெருக்கைக் கவிதையில் வெளியிட்டுள்ளார்கள். இறைவிபாலுள்ள பத்திரச உணர்வுகளை பிரதிருபஞ் செய்யும் சொல்லோவியங்களாக அமைந்துள்ள அவர்தம் கவிதைகள் இலகுவான நடை பயின்று, படிப்பவர். உள்ளத்தைத் தொடுமியல்பினவாய்ப் பரிமளிக்கின்றன. கருத்தோட்டமும், சொல்வளமும், ஓசையமைதியும் உடையனவாய்த் திகழும் பாடல்கள் பழைய கவிஞர் பரம்பரையை நினைவூட்டுகின்றன. அம்மையின் அருள் வடிவழகைச் சித்திரிக்கும் வகையிற் பாடல்கள் சில; அவள்

அருளை யாசிக்கும் விண்ணப்பமாக அமைந்த பாடல்கள் சில; அவளது பேரருட் பெருக்கு மகிமையை இயம்பு வனவாகப் பாடல்கள் சில. இவ்வாறு பல்வகைக் கருத்து வெளிப்பாட்டு மலர்களாலியன்ற பாமஞ்சரியாக விளங்குவது கவிஞரின் படைப்பு. மரபுக் கவிதை பாடும் நல்லியற் கவிஞர்கள் அருகிவரும் இக்காலத்தே பாவினங்களுள் கடினமான ஒன்றாக விளங்கும் கட்டளைக் கலித்துறைக் கவிதைப் படைப்பில் வெற்றி கண்டுள்ள ஆசிரியர் முயற்சி வரவேற்பிற்கும் பாராட்டுக்குமுரியது. கவிஞரின் பக்தியும் கவித்துவமும் இணைந்த சாமரை வீச்சால் மயூரபதி அம்மை உள்ளம் குளிர்ந்து தம்கருணைப் பிரவாகத்தால் அடியார்கள் அன்பர்கள் அனைவரையும் அருள் நெறிப்படுத்த வேண்டிப் பிரார்த்திப்போம்.

கவிஞர் அவர்கள் மயூரபதி பத்திரகாளி அம்மை மீது ஏலவே ஒரு பதிகம் பாடியுள்ளமையும் அவர் பக்திப் பெருக்கைப் புலப்படுத்துவதாகும்.

**பிள்ளைக்கவி. வ. சிவராசசிங்கம்**
உதவி ஆணையாளர்
அரசகருமமொழித் திணைக்களம்
கொழும்பு,

## சிவநெறிப் புரவலர், சிவநெறிச் செம்மல்
# பொ. வல்லிபுரம் ஜே. பி
## அவர்களின்
# வாழ்த்துரை:

ஆசிரியர் வித்துவான் ம. முருகேசு அவர்கள், மயூரபதி பத்திரகாளி அம்பாளை முதன்முதலிற் கண்டு, தரிசனஞ் செய்த பொழுது, ஊற்றெடுத்து உதயமான பக்திப் பெருக்கின் காரணமாக, அன்னாரால் ஆக்கம்பெற்று" மயூராபதியைக் கண்டேன்" என மகிடமிட்டு இயற்றிய நூலினை பரிபாலன சபை 1991ல் வெளியிட்டது.

அந்நூல் மயூரபதி அம்மன் ஆலயத்தின் அழகுறு தோற்றத்தினையும், அங்குக் கொலு, வீற்றிருந்து அருள்பாலிக்கும் அம்பிகையின் அருட்கருணையையும் மையமாக வைத்து ஒரு விமர்சனக் கண்ணோட்டமாக விருத்தப்பாக்களால் ஆக்கப் பெற்றது.

அடுத்து, பக்திச் சுவை நனி சொட்டக் கட்டளைக் கலித்துறைப் பாவடிவில் மயூரபதி பத்திரகாளி அம்மைக்குரிய பதிகமான இந்நூற்பாக்களை இவ்வாண்டிலே யாத்துள்ளார் ஆசிரியர்.

மயூரபதித் தலத்திலே முதன்முதல் எழுந்துள்ள அம்பாள் புகழ்பாடும் தோத்திரப் பதிகம் இதுவாகும். இதன் கண்ணுள்ள பாக்கள் அனைவரும் பாடித்துதிப்பதற்கு உகந்தவை. இந்நூலைத் தாமே அச்சிடுவித்து வெளியிடும் பொறுப்பையும் ஏற்று மயூரபதி அம்பாளுக்கு அன்புக் காணிக்கையாகச் சமர்ப்பித்துள்ளார் ஆசிரியர். இவரது பணி போற்றுதற்குரியது.

ஆசிரியர் மேன்மேலும் ஆன்மீகத் துறையிலே திளைக்கவும், அருமையான கவிதைகளை ஆக்கவும், எல்லாவகையிலும் வளர்ச்சி அடையவும் அம்பாளை வேண்டி, அன்னாரை அன்புடன் வாழ்த்துகிறேன்.

பொ. வல்லிபுரம்

# மயூரபதி பத்திரகாளி அம்பாள்
## ஆலய சிவாச்சாரியார்
## சிவஸ்ரீ. ச . உருத்திரானந்தக் குருக்கள்
## அவர்களின் ஆசியுரை:

ஜயந்தி மங்களா காளி
பத்திர காளி கபாலினி
துர்க்கா சஷமா சிவா தாத்ரி
ஸ்வாஹா ஸ்வதா நமோஸ்துதே

இலங்கைமணித்தீவகத்தின் தலைநகராம் குபேரபுரியான கொழும்பு மாநகரில் வெள்ளவத்தைப்பகுதியில் அரசமரமும் வேப்பமரமும் சிவமும் சக்தியுமாகப் பிணைந்திருந்து, மயூரபதியில் வீற்றிருந்து, அன்பர் துயர்தீர்த்து, அடியவர்க்கு அருள்பாலிக்கும் அன்னை பராசக்தி பத்திரகாளி அம்பாள் மீதுள்ள அன்பின் நிமித்தம் பக்திப் பரவசத்தோடு "மயூரபதி பத்திரகாளி அம்மை பதிகம்" என்ற தோத்திரப்பாமாலையைக் கவிஞர், வித்துவான் ம.முருகேசு அவர்கள் பாடியுள்ளார்கள். அவர்களது பணிபோற்றத்தக்கது. அம்பாள் புகழ்பாடும் அவரது பணி மேலும் சிறப்பதாக.

இத்தோத்திரப்பாக்களைப்பாடி அன்னையின் அருளைப் பெறுவோமாக.!

இந்நூல் இலட்சார்ச்சனை நடைபெற்றுப் புதிதாகச் செய்யப்பெற்ற தேரில் விநாயகர் முருகப்பெருமானுடன் அன்னை பத்திரகாளி அம்பாள் வீதிபவனிவரும் நாளில் வெளியிடப் பெறுவது மேலும் சிறப்புடைச்செயலாகும் அன்னையின் அருள் அனைவர்க்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஓம்சக்தி .

*ச.உருத்திரானந்தக்குருக்கள்.*

# கொழும்பு மாநகர்
# வெள்ளவத்தை - மயூரபதி
# பத்திரகாளி அம்மை பதிகம்

## விநாயகர் காப்பு

சக்தி உமையவள் சங்கரர்
தாம்பெற்ற சற்குணனே,
சித்தி விநாயக னேயென்றன்
சிந்தை திகழ்பவனே,
பத்திர காளிநம் அம்மை
பதிகம் பகலிர்வுஎன்
சித்தத்துள் நின்றிடச் செய்வாய்; நின்
பாதம்என் சென்னியதே.

(சென்னி- தலை)

## நூல்
## கட்டளைக் கலித்துறை

பின்னிப் பிணைந்துதில் வேம்பும்
அரசும் பிணங்கிநிற்க
மன்னும் அவற்றின்கீழ் சூலத்தி
லேவந்து மாட்சிதந்தாய்!
பன்னும் மயூர பதியுறை
பத்திர காளியம்மே,
இன்னல் தரும்வினை போக்கி
அருள்வாய் இமயவளே. 1

பேசும் சுரும்புறு வேம்பும்
அரசும் பிணைந்துநிற்றல்,
ஈசன் இறைவி இணைந்துநில்
காட்சியி தாகுமென்றே
ஆசறு காட்சி அடியார்
இயம்புவர்; ஆகையினாற்
தேசுறு சக்தி, சிவன்சார்
தலத்தின்சீர் செப்பரிதே. 2

(ஆசறு -குற்றமற்ற; சுரும்பு -வண்டு; தேசு -அழகு)

நர்த்தனம் அம்பலத் தாடும்
இறைவற்கு நாயகியை,
அத்தி முகன்தனைப் பெற்றிடு
தாயினை, ஆரணங்கை,
பத்திர காளி அனைதனை,
எங்கள் பராசக்தியை,
சித்திரத் தேருறும் தேவியை
வாழ்த்துதும் சீர்மிகுமே. 3

மாரி மகாமாயி வாகி
மரகத வல்லியர்த்த
நாரி நடனந் நயந்திடு
நாயகி நங்கைநல்லாள்
கோரித் தமது குறைசொலும்
அன்பர் குறைகளைந்து
வாரி வழங்குவள் நல்லன
யாவும்இவ் வையகத்தே. 4

ஏத்தும் மயூர பதிதனை
மேவிய எங்களம்மை,
சாத்தும் நகைமுதல் பட்டாடை
சிந்துரம் சந்தனம்நீ(று)
ஈர்த்திடு பூமாலை இன்னன
கண்டே இரவுபகல்
தோத்திரஞ் செய்பவர்க் கெந்நாளும்
இல்லைத் துயரமதே. 5

(சிந்துரம்-குங்குமம்)

செப்பிடு வேப்பிலை கைத்தலத்(து)
ஏந்திவெஞ் சீற்றங்கொண்டு,
துப்பார் புவனத்தோர் யாரும்
துணுக்குறு தோற்றம்பூண்டே
ஒப்பிலாப் பாங்கில் உருவாடும்
அம்மே, உலகத்தாயே,
தப்பிலா அன்பர் துயரெலாம்
சாடுவாய்; தண்ணளியே. 6

(துப்பார் -வலிமைநிறைந்த;
புவனத்தோர் -உலகத்தவர்)

அழகுறு முக்கண்ணும் அங்கையிற்
பாசமும் அங்குசமும்
பழகுறு வில்லாம் கரும்பும்
மலரெனும் பாணங்களும்
குழகுறு வெண்பிறை யும்கொண்டாள்
காளினி கோலமிதே;
உலகுறு மாதா உருவந்
தொழத்தீங்(கு) ஒழிந்திடுமே. 7

(குழகு-அழகு)

மங்கல நாயகி யாகத்
திகழ்ந்து நல் மங்கையர்க்குக்
குங்கும வாழ்வைக் கொடுத்துஞ்,சொல்
தோஷக் கொடுமைதவிர்
அங்கயற் கண்ணியை ஆத்தாளைப்
போற்றி அடிவணங்கின்,
பொங்கும் கவலைகள் போய்விடும்;
நன்மைகள் பூத்திடுமே. 8

ஐந்து கரத்தனும் ஆறு
முகத்தனும் அம்மையும்நம்
சிந்தை மகிழ வலமாகச்
சித்திரத் தேரினிலே
வந்திடு காட்சியை வர்ணிக்கச்
சொல்லேது? வந்துதொடர்
முந்தைய புண்யமோ பக்திப்
புனலதில் மூழ்கினனே. 9

(புனல்-வெள்ளம்)

ஆயிரம் கண்கொண்(டு) அருள்தாய்
கழல்நினைந் தாலயத்தே
போயொரு போதேனும் போற்றித்
தொழுதிடும், பூமியென்னும்
மாயிரு ஞாலத்(து) அடியவர்க்
கேநல் வளங்கள்தரும்;
வேயுறு தோளி கடைக்கண்கள்,
நாளும் விரும்புமினே. 10

பிங்கலை யே,மணி வாசகன்
சொன்ன பிறவித்தொடர்,
இங்கெனை மேலும் தொடராதே
ஓச்சி, இமையவர்வாழ்
துங்க முறுநல் கதிதனை
ஈவாய், துயரொழிய
இங்குனை நாகொண்டு வாழ்த்தி
வணங்கியான் ஏத்துவனே. 11

(பிங்கலை-பார்வதி; துங்கம்-உயர்ச்சி)

ஆங்காரி! துர்க்கை! வராகி!
அசுரன் அகந்தையினை,
தாங்காத துன்பம் உறுநின்
அடியவர் தம்பொருட்டாய்
ஓங்காரி காளி அவதாரம்
கொண்டே ஒழித்துக்கட்டி,
நீங்காத இன்னல் களைந்தாய்;
நினைகுவம் நேரிழையே. 12

ஆடி வரும்ரதத் தம்பாள்
வலமாய் அசைந்தசைந்து
நாடித் தொழுவார் இசைக்க
வருஞ்சீர் நளினங்களை
பாடி முடித்தல் எளிதோ?
மகிழ்வம்நாம்; பண்ணுடனே
ஆடிக் களிக்கும் மயூர
பதிமயில் ஆரமுதே. 13

பூதங்கள் ஐந்துமோ உன்னுள்
அடக்கம்; புவனமொடு
வேதங்கள் நான்குமோ உன்னுள்
அடக்கம்; விளங்குதில்லை
நாதன் அவருமோ உன்னுள்
அடக்கம்; நவிலும்எந்தப்
பேதமும் இல்லா(து) எமையும்
அணைத்திடு; பேரளியே. 14

பட்டர் குமர குருபரர்
பக்திப் பரவசத்தால்
இட்ட முடனங்(கு) இசைத்திட்ட
பாக்களை ஏற்றுஉவந்தாய்;
பட்டணி மேனி உமையம்மே,
என்நாச்சொல் பாக்களையும்
மட்டில், மகிழ்வுடன் ஏற்றருள்
செய்வயோ? மாண்புறுமே! 15

ஈர்த்திடு கற்பூர தீப
ஒளிதனில் எங்கள்அம்மே,
பார்த்துனை ஏத்திப் பரவசம்
தான்கொள்வர் பக்தரெலாம்;
ஆர்த்திடு அன்பர்வாய் வார்த்தை
அரகர அங்குமிங்கும்
நேர்த்தியாய்க் கேட்கும்; அதற்கு
நிகரில்லை நேரிழையே. 16

கண்ணீர் சொரிந்தும் கரங்கள்
குவித்தும் கனத்துநிற்கும்
எண்ணில் மனச்சுமை நீங்கிட
வேண்டினன்; இந்தவரம்
அண்ணல் இடபால் அணைந்தே
அரசோச்சும் அம்பிகையே,
தண்ணளி மேவிடத் தந்தெனை
ஆள்வாய் தருணமிதே. 17

வஞ்சம்செய் காலன் எனையண்டி
அந்நாள் வரும்சமயம்,
அஞ்சல் எனச்சொல்லி முன்வந்(து)
அணைப்பாய்; அழகுவிஞ்சும்
கஞ்ச மலர்முகத் தாளே,
நினது கழலிணையைத்
தஞ்சம் எனத்தொழு வன்யான்
தனயனைத் தாங்கிக்கொள்ளே. 18

துன்பம் பிணிநோய் இருந்தெனைத்
தாக்கும் துயர்களைந்தே
என்புதோல் போர்த்த உடம்பும்
உளமும் எழில்பெறவே
இன்பந் தருநல் கருணை
மலர்த்தேன் இணைப்பதந்தந்(து)
உன்பிள்ளை தன்குறை தீர்க்க
வருவாய் உமையவளே. 19

எங்கும் நிறைந்துள்ள சக்தி
சரணம்; இதந்தருநல்
மங்கல வாழ்வருள் சக்தி
சரணம்; வலிமைமிக்க
சிங்கம் அமர்ந்தருள் சக்தி
சரணம்; சிறப்பனைத்தும்
தங்கும் படி செய்யும் சக்தி
சரணம்; சரணமம்மே. 20

## வாழ்த்து

வாழ்க பராசக்தி பத்திர
காளினி, மால்மருகர்,
வீழ்க அருட்புனல், ஓங்கி
மிளிர்க வியன்உலகம்,
ஆழ்க துயருறு தீவினை,
வெல்க அறங்கள்தொண்டு,
சூழ்க சிவசக்தி நாமம்,
வருக சுபநலனே. 21

* * * * *

மயூரபதிபத்திரகரளி அம்மை பதிகம்
முற்றிற்று



பாவாசிரியர்:
மயூரபதி பத்திரகாளி
அம்மை பதிகம்

ஆசிரியர் இயற்றி
வெளிவந்த நூல்கள்

மயூராபதியைக் கண்டேன்
(வெளியீடு மயூரபதி அம்மன் தேவஸ்தானம்)

ஆடி 1991

மயூரபதி பத்திரகாளி அம்மைபதிகம்

ஆடி 1993